<u>சுருக்கம்</u>

உயர்கல்வி – கல்லூரிக் கல்வி – அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் – 2013–14ஆம் கல்வியாண்டில் புதிய பாடப்பிரிவுகள் தொடங்குதல் மற்றும் உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் தோற்றுவித்தல் – ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (ஜி1) துறை

அரசாணை (நிலை) எண்:163

நாள்: 11.9.2013

விஜய, ஆவணி 26,
திருவள்ளுவர் ஆண்டு 2044

<u>படிக்கப்பட்டது</u>:-

கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண். 40199/க்யூ 3/ 2013, நாள் 4.3.2013, 6.3.2013 மற்றும் 29.5.2013.

---------

<u>ஆணை</u>:–

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2013–14ம் கல்வியாண்டில் புதிய இளநிலை/முதுநிலை/ஆராய்ச்சி பாடப்பிரிவுகள் துவங்குவதற்கும், அதற்கு 2013–14, 2014–15 மற்றும் 2015–16 ஆகிய ஆண்டுகளில் தேவையான உதவிப் பேராசிரியர் பணியிடங்களை தோற்றுவித்து, தேவையான நிதியினை ஒதுக்கீடு செய்திடவும் கல்லூரிக் கல்வி இயக்குநரிடமிருந்து கருத்துரு அரசால் பெறப்பட்டது. இதனை தொடர்ந்து தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2013–14ஆம் ஆண்டிற்கான உயர்கல்வித்துறை மானியக்கோரிக்கையை சமர்ப்பித்தபோது மாண்புமிகு அமைச்சர் (உயர்கல்வி) அவர்கள் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

"அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் அதிக அளவில் மாணவர்கள் சேருவதைக் கருத்திற்கொண்டும், 2025–ஆம் ஆண்டில் உயர் கல்வியில் 25 சதவீத மொத்த சேர்க்கை விகித குறியீட்டை அடையும் நோக்கிலும், இன்றைய தேவைக்கு ஏற்பவும், இக்கல்லூரிகளில் புதிய பாடப்பிரிவுகளை அறிமுகப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. அதற்கேற்ப இக்கல்வி ஆண்டில் 51 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 398 புதிய பாடப்பிரிவுகள் அறிமுகப்படுத்தபடும். இதற்கென 2013–14, 2014–15 மற்றும் 2015–16 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கு 827 புதிய உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும்"

2. மேற்படி அறிவிப்பினை தொடர்ந்து, அரசு கீழ்க்கண்டவாறு ஆணைகளை வெளியிடுகிறது:–

(i) இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 51 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் அவைகளுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள மொத்தம் 398 புதிய இளநிலை / முதுநிலை / ஆராய்ச்சி பாடப்பிரிவுகளை, அப்பாடப்பிரிவுகளில் தேவையான மாணவர் சேர்க்கை உறுதிபடுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, 2013–14ம் கல்வியாண்டு முதல் துவங்க அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ii) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் துவங்கப்படும் புதிய பாடப்பிரிவுகளுக்காக இந்த ஆணையின் இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு ரூ.15,600–39100+ரூ.6,000 (Grade Pay) என்ற ஊதிய விகித அடிப்படையில் 2013–14ம் ஆண்டிற்கு 339 உதவிப் பேராசிரியர் பணியிடங்களும், 2014–15ஆம் ஆண்டிற்கு 342 உதவிப் பேராசிரியர் பணியிடங்களும் மற்றும் 2015–16ஆம் ஆண்டிற்கு 146 உதவிப் பேராசிரியர் பணியிடங்களும் ஆக மொத்தம் 827 உதவிப் பேராசிரியர் பணியிடங்களை ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

..2..

3. மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணியிடங்களுக்கான செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

(i) ஆடவர் கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு கணக்கு தலைப்பு

2202 – பொதுக்கல்வி -03 பல்கலைக் கழகக் கல்வியும் உயர்கல்வியும் – 103 அரசு கல்லூரிகளும், கல்வி நிறுவனங்களும்–I. திட்டத்தில் சேராதது. AA கலைக்கல்லூரிகள் (ஆடவர்) – 01 சம்பளங்கள்
(த.தொ.கு.2202 – 03 – 103 AA –0109)

(ii) மகளிர் கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு கணக்கு தலைப்பு

2202 – பொதுக்கல்வி -03 பல்கலைக் கழகக் கல்வியும் உயர்கல்வியும் – 103 அரசு கல்லூரிகளும், கல்வி நிறுவனங்களும்–I. திட்டத்தில் சேராதது. AB கலைக்கல்லூரிகள் (மகளிர்) – 01 சம்பளங்கள்
(த.தொ.கு.2202 – 03 – 103 AB –0107)

4. மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணியிடங்களுக்கான செலவினம் ஒரு "புது துணைப் பணி செலவினமாக" கருதப்படும். துணை மதிப்பீடுகளில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும் வரை ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணியிடங்களுக்கான செலவினம் முதற்கண் எதிர்பாராச்செலவு நிதி முன்பணம் மூலம் மேற்கொள்ளப்படும். எதிர்பாராச் செலவு முன்பணத்திற்கான ஒப்பளிப்பு ஆணைகள், கல்லூரிக் கல்வி இயக்குநரிடமிருந்து உரிய படிவத்தில் இவ்வரசாணையின் படியுடன் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பத்தின் அடிப்படையில் நிதி (வ.செ.பொ. I) துறையில் வெளியிடப்படும்.

5. மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணியிடங்களின் செலவிற்காக உடனடியாக தேவைப்படும் தொகையினைக் கணக்கிட்டு அதனை எதிர்பாரா செலவு நிதி முன்பணமாக பெற தேவையான கருத்துருவையும் இச்செலவினத்தை 2013–14ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்ப்பதற்கான விளக்கக் குறிப்பினையும் உரிய நேரத்தில் நிதித்துறைக்கு அனுப்பி வைக்குமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 4997/CMPC/2013, நாள் 10.9.2013 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.1125 (ஆயிரத்து நூற்று இருபத்தைந்து) பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வ வர்மா,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை–6. (இ)
மாநிலக் கணக்காயர், சென்னை–18. (இ)
சம்பளக்கணக்கு அலுவலர், சென்னை35/1/5. (இ)
கருவூலக் கணக்கு இயக்குநர், சென்னை–15. (இ)
சார்ந்த முதல்வர்கள் (கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக) (இ)
நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9. (இ)
உயர்கல்வித் துறை அமைச்சரின் சிறப்பு தனிச்செயலர், சென்னை–9. (இ)
நிதித் (கல்வி–I / வ.செ.பொது–I / வ.செ.பொது–II / சி.எம்.பி.சி.) துறை, சென்னை–9.(இ)
இ.கோ. / உதிரிகள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர். 11.9.13